LIBR
23 AUG 2013

# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# (EXTERNAL DEGREE)
## PART – III ($4^{th}$ YEAR) EXAMINATION IN BBA – 2008 / 09 (May/June2013)

## EXB 402 ECONOMIC DEVELOPMENT AND PLANNING

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்:-03 மணித்தியாலங்கள்

---

01. a). மரபுசார் பொருளியலையும், அபிவிருத்திப் பொருளியலையும் வேறுபடுத்தி விளக்குக.

(04 புள்ளிகள்)

b). அபிவிருத்தி தொடர்பான விளக்கத்தில் டட்லி சியர்ஸ் என்பவரின் அணுகுமுறையை விளக்குக.

(08 புள்ளிகள்)

c). மக்களின் மெய் வருமானத்திற்கும் அதிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்குமிடையே பாரிய இடைவெளி காணப்படுகிறது. இதற்கான மூலகாரணங்களாக அமார்த்தியா சென் எவற்றைச் சுட்டிக் காட்டுகிறார்? விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மக்களின் உற்பத்தித்திறன் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

b). “குறைவிருத்தி நாடுகள் பெருமளவுக்கு விவசாயம் சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடுவதுடன் கணிசமான அளவில் முதனிலைப் பொருட்களையே ஏற்றுமதி செய்து வருகின்றன.” உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

c). விருத்தியடைந்து வரும் நாடுகள் தமது வரலாற்றுப்பின்னணியிலும், பௌதிக மற்றும் மனித வளப்பேற்றிலும் எவ்வாறு தமக்குள் வேறுபட்டு நிற்கின்றன? உதாரணம் தந்து விளக்குக

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. a). லோரன்ஸ் வளையியானது (Lorenz curve) எவ்வாறு ஒரு பொருளாதாரத்தின் வருமான ஏற்றத்தாழ்வு நிலைமைகளைக் காட்டி நிற்கிறது என்பதனை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

b). நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பதனை சுருக்கமாக விளக்குக.

( 04 புள்ளிகள்)

c). உலகளாவிய சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக விருத்தியடைந்த நாடுகள் எவ்விதம் குறைவிருத்தி நாடுகளுக்கு உதவ முடியும்?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. a). றொஸ்டோவின் பொருளாதார வளர்ச்சி மாதிரியில் இடம்பெறும் பிரதான கட்டங்களையும் அவற்றின் இயல்புகளையும் விளக்குக.

( 12 புள்ளிகள்)

b). பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆர்தர் லூயிஸ் மாதிரியானது குறைவிருத்தி நாடுகளின் வளர்ச்சிப் போக்கினை விளக்க எந்தளவுக்குப் பொருத்தமானது? விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

05. a). குறைவிருத்தி நாடுகளில் திட்டமிடல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைவதற்கு வேண்டிய முன்நிபந்தனைகள் சிலவற்றை விளக்குக.

(08 புள்ளிகள்)

b). "குறைவிருத்தி நாடுகள் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே திட்டமிடலை மேற்கொண்டு வருகின்றன" ஏற்றுக்கொள்வீரா?

(04 புள்ளிகள்)

c). "அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் எதிர்நோக்கிவரும் எதிர்பாராத குழப்பங்களும் அங்கு திட்டமிலானது தோல்வியடைவதற்கான ஒரு காரணியாக விளங்குகிறது." உதாரணம் தந்து விளக்குக

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளி)